**O.S No. : 253/2019**

**DATE : 05.08.2024**

**NAME : விஜயகுமாரி க/பெ. பிரபாகரன்**

**வா.சா. 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி– பிரதிவாதி தரப்பில்**

1) வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் ஓர் அளவுக்கு தெரியும். வழக்கு சொத்து பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு சொந்தமானது என்றால் சோமசுந்தரமுதலியாருக்கு சொந்தமானது. வா.சா.ஆ 1 ஆவணமானது சோமசுந்தரமுதலியார் குப்புசாமி வகையாரிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரம் என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ 1 ஆவணத்தில் திண்னை இருப்பதை பற்றி சொத்து விவரத்தில் சொல்லவில்லை என்றால் அங்கு திண்ணையே இல்லை. நான் இருக்குமிடத்திற்கு பின்பக்கம் யாருக்கு ஆதியில் சொந்தமானது என்றால் இந்திராணிக்கு சொந்தமானது ஆகும். எனக்கு திருமணம் ஆகி எத்தனை வருடங்களானது என்றால் 35 வருடங்கள் ஆகிறது. 35 வருடங்களாக திண்னை இல்லையா என்றால் அதற்கு முன்பாகவே திண்னை இல்லை. மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் என் மாமனார் கூறி தெரியும்.

3) வழக்கு சொத்து மற்றும் இதர சொத்து குறித்தும் சோமசுந்தர முதலியாரின் வாரிசுகளிடையே பாகபிரிவினை நடைபெற்றது என்றால் சரிதான். அவ்வாறு பாக பிரிவினையில் வழக்கு A அட்டவணை சொத்து என் மாமனார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு A அட்டவணை சொத்தை என்

கணவருக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலமாக என் மாமனார் எழுதி வைத்து விட்டார் என்றால் சரிதான்.

4) நான் என வழக்கில் வழக்கு A அட்டவணை சொத்தின் ஒரு பாகம் தான் வழக்கு B அட்டவணை சொத்து என குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் குறிப்பிடவில்லை. என் கணவர் வா.சா.ஆ 4 செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்திற்கு மட்டும் தான் உரிமை கோர முடியும் என்றால் சரிதான். என் மாமனார் வழக்கு சொத்தில் கட்டிடம் கட்ட அனுமதி பெற்றதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்து உள்ளேன்.

5) நான் அவ்வாறு எந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் சொத்தில் பிரதிவாதி கட்டிடம் எழுப்பி விட்டதாக தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 7 மாதிரி வரைபடத்தை என் கணவர் தான் தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ 7 மாதிரி வரைபடத்தில் AEFG என குறிப்பிட்டுள்ள இடத்தை தான் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யபட்டுள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் சரிதான்.

6) வா.சா.ஆ 7 மாதிரி வரைபடத்தில் எனது வீட்டின் நீள அகலத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வா.சா.ஆ 7 மாதிரி வரைபடத்தில் கிழக்கு மேற்கு 20 3/4 அடியும், வடக்கு தெற்கு 38 அடியும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எவ்வளவு அடிக்கு வீடு கட்டி உள்ளேன் என்று வா.சா.ஆ 7 மாதிரி வரைபடத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் என மாமானார் அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் முழுவதும் வீடு கட்டி விட்டதால் தான் நான் என் வீட்டின் அளவுகளை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

7) என் மாமனார் அவருக்கு பாதியப்பட்ட முழு சொத்திற்கும் கட்டிடம் அனுமதி வாங்கினார் என்று என் வழக்கில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மாமனார் அனுமதி பெற்ற ஆவணத்தை நான் உண்மையை மறைப்பதற்காக தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வா.சா. ஆ 7 மாதிரி வரைபடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக சொல்லப்படும் அளவுகள் தோரயமாக குறிப்பிட்டுள்ளேனா அல்லது அளந்து குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு அளவுகள் தெரியாது எங்கள் சொத்தில் பாதி ஆக்கிரமிப்பு செய்து விட்டார்.

8) என் மாமனார் பெயரில் இருந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் தாகக்ல் செய்து உள்ளேன். தாவா சொத்திற்கு பின் பகுதியில் என் மாமனாருக்கு ஒரு பாகம் இருந்தது என்றால் சரிதான். என் மாமனார் மேற்படி பின் பகுதியிலுள்ள பாகத்தை பிரதிவாதியின் மகள் கஜலஷ்மிக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். நான் இருக்கும் வீட்டிற்கு பின் பக்கம் உள்ள பகுதி நடேச ஐயருக்கு சொந்தமானது என்றால் இருக்கலாம்.

9) மேற்படி நடேச ஐயர் சுவாமி நாத முதலியாருக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி நடேச ஐயர் சுவாமி நாதனுக்கு கொடுத்த கிரைய பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி கிரைய பத்திரம் 1932 ஆம் ஆண்டு சுவாமி நாதன் கிரையம் வாங்கினார் என்றால் இருக்கலாம்.

10) சுவாமி நாதன் கிரைய பத்திரத்தில் சொத்து விவரத்தில் புழக்கடையில் வடக்கு தெற்கு 44 அடி கிழக்கு மேற்கு 20 1/2 அடி இதில் தாண்வடராய ஐயர் கிழண்டை பாகம் பாதி போக இப்போது கிரையம் செய்யும் பாகம் மேலண்டை கிழக்கு மேற்கு 10 1/2 அடி வடக்கு தெற்கு 51 அடி இதிலுள்ள மெத்தை தட்டோடும் தெரு

திண்ணையில் என குறிப்பிட்டுள்ளதாக பிரதி வாதி வழக்கறிஞர் படித்து காண்பித்தார் அதை சாட்சி சரியென்று ஒத்துகொண்டார். மேற்படி கிரைய பத்திரத்தின் சுவாமிநாதனுக்கு தெரு திண்ணையில் பாதி பாகம் உள்ளது என்றால் சரிதான்.

11) என் மாமனார் உயிருடன் இருக்கும் போது தான் வீடு கட்டினார் என்றாலும் நாங்கள் எதுவும் கட்டவில்லை என்றாலும் சரிதான். என் சொத்திற்க்கு பின் பக்கம் உள்ள சொத்து உரிமையுள்ள சுவாமி நாத முதலியாரின் வாரிசுகள் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. சுவாமி நாதனுக்கு பாலம்மாள், குமார சுவாமி என வாரிசுகள் உள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது.

12) குப்பம்மாள் மேற்படி பாலம்மாள், குமார சுவாமியிடமிருந்துதான் கிரையம் வாங்கினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது ஆனால் குப்பம்மாள் சொத்தை அனுபவித்து வந்தார் அது மட்டும் தான் எனக்கு தெரியும். 1959 ஆம் ஆண்டு குப்பம்மாள் கிரையம் பெற்ற ஆவணத்தை நான் படித்து பார்த்தேன் என்றால் நான் படித்து பார்க்கவில்லை. மேற்படி குப்பம்மாள் கிரையம் பெற்ற ஆவணத்தில் தெரு திண்ணை என குறிப்பிட்டுள்ளனர் என்றால் நான் அந்த ஆவணத்தை படித்து பார்க்கவில்லை.

13) குப்பம்மாள் இந்திராணி மற்றும் அவரது மகன் மகள்களுக்கு ஒரு உயில் சாசனம் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் குப்பம்மாளுக்கு பிறகு இந்திராணி அனுபவித்து வருவது எனக்கு தெரியும். உயில் சாசனத்தில் தெரு திண்னை மேலாண்டையில் பாதி பாகம் என குறிப்பிட்டு எழுதி உள்ளார் எனறால் உயில் பற்றி எனக்கு தெரியாது. இந்திராணி அம்மாள் மற்றும் அவரது வாரிசுகள் கஜலஷ்மிக்கு கிரையம் கொடுத்ததன் அடிப்படையில் தான் என் கணவர் கஜலஷ்மி மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

14) கஜலஷ்மி கிரையம் பெற்ற ஆவணத்தை படித்து பார்த்து தான் அந்த வழக்கை அவர் தாகக்ல் செய்தார் என்றால் இருக்கலாம். நான் கஜலஷ்மி கிரையம் பெற்ற ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. என் கணவர் விசாரித்தால் தான் மேற்படி விவரம் தெரியுமா என்றால் தெரியும். கஜலஷ்மி கிரைய பெற்ற ஆவணத்தில் தெரு திண்ணையில் பாதி பாகம் என குறிப்பிட்டுள்ளார்கள் எனற்ால் நான் ஆவணத்தை படித்து பார்க்கவில்லை.

15) பிரதிவாதி வழக்கில் என்ன பதிலுரை தாக்கல் செய்து உள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்த சத்திய பிராமண வாக்குமூலத்தில் என்ன விவரம் சொல்லியுள்ளேன் என்று எனக்கு தெரியுமா என்றால் படித்து பார்த்தேன் தற்போது எனக்கு ஞாபகமில்லை. தமிழ் எனக்கு தெரியுமா என்றால் படித்து பார்க்க தெரியும்.

**(வாதி தரப்பு வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

**Typewritten by the typist in open court to my dictation and to my bearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct**

**Sd/-P.T.Satheesh Kumar**
**Principal District Court,**
**Kancheepuram**